

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 191 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – மாசி 08 – வியாழக்கிழமை 20 பிப்ரவரி 2025 – வெளியீடு 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 191: Thiruvalluvar Year - 2056 - Maasi 08 - Thursday 20 February 2025 - Dak 16 Pages ₹ 5.00






முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.2.2025) சென்னை, டிக்காஸ்டர் சாலையில் அமைந்துள்ள டான்போஸ்கோ பள்ளி வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் சந்திரயோகி சமாதி, ராதா கிருஷ்ணபுரம் மற்றும் சத்தியவாணி முத்துநகர் ஆகிய திட்டப் பகுதிகளில் 712 குடியிருப்புதாரர்களுக்கு குடியிருப்புக்கான ஒதுக்கீடு ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, இ.பரந்தாமன், அ.வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் எஸ். பிரபாகர், சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தேர்தல் அறிக்கையில் சொன்னதை 90 சதவிகிதம் முடித்ததுடன்

# சொல்லாத வாக்குறுதிகளையும் நிறைவேற்றுகிறோம்!

### வடசென்னை பகுதியில் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில்

### வீடுகள் ஒதுக்கீட்டு ஆணைகளை வழங்கி முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை, பிப். 20 -

**“தேர்தல் அறிக்கையில் சொன்னதை 90 சதவிகிதம் முடித்ததுடன், சொல்லாத வாக்குறுதிகளையும் நிறைவேற்றுகிறோம்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், வடசென்னை பகுதியில் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் வீடுகள் ஒதுக் கீட்டு ஆணைகளை 712 பயனாளிகளுக்கு வழங்கி பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.2.2025) சென்னை, டிக்காஸ்டர் சாலையில் அமைந்துள்ள டான்போஸ்கோ பள்ளி வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் சந்திரயோகி சமாதி, ராதா கிருஷ்ணபுரம் மற்றும் சத்தியவாணி முத்துநகர் ஆகிய திட்டப் பகுதிகளில் 712 குடியிருப்புதாரர்களுக்கு குடியிருப்புக்கான ஒதுக்கீடு ஆணைகளை வழங்கி ஆற்றிய உரை வருமாறு:-

இன்றைக்கு வடசென்னை பகுதியில் இந்த சிறப்பான நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கடந்த காலங்களில் வடசென்னை எந்த அளவிற்கு ஒதுக்கி வைக்கப்பட்டிருந்ததோ அதையெல்லாம் மாற்றி நாம் இன்றைக்கு வடசென்னையை வளர்ச்சி சென்னையாக, எப்படி இன்றைக்கு மத்திய சென்னை, தென் சென்னை வளர்ந்து வந்திருக்கிறதோ, அதேபோல், இந்த வடசென்னைப் பகுதியையும் மாற்றிட வேண்டும், அதைவிட பெரிதாக உருவாக்கிட வேண்டும் என்பதற்காகதான் நம்முடைய அரசு இன்றைக்கு சிறப்பாக பல்வேறுத் திட்டங்களை கொண்டுவந்து சேர்த்திருக்கிறது.

முதலில் நான் வடசென்னை பகுதிக்காக சட்டமன்றத்தில் 1000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து வடசென்னை வளர்ச்சித் திட்டம் உருவாக்கப்பட இருக்கிறது என்று நான் அறிவித்தேன். இப்போது 1000 கோடி அல்ல, 6400 கோடியாக உயர்த்தப்பட்டு பணிகளையெல்லாம் நாம் செயல்படுத்திக்கொண்டு இருக்கிறோம்.

> **முதலில் நான் வடசென்னை பகுதிக்காக சட்டமன்றத்தில் 1000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து வடசென்னை வளர்ச்சித் திட்டம் உருவாக்கப்பட இருக்கிறது என்று நான் அறிவித்தேன். இப்போது ரூ.1000 கோடி அல்ல, ரூ.6400 கோடியாக உயர்த்தப்பட்டு பணிகளையெல்லாம் நாம் செயல் படுத்திக் கொண்டு இருக்கிறோம்.**

**குடிசை மாற்று வாரியம் கலைஞர் கொண்டு வந்த திட்டம்!**

அதேபோல், நகர்ப்புற வாழ்விட மேலாண்மை வாரியத்தின் சார்பில், 5059 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 23 மாவட்டங்களில் 44,609 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில்தான் இன்றைக்கு வடசென்னைப் பகுதியில் இருக்கும் ஏழை எளிய மக்கள் அடுக்குமாடி குடியிருப்பில் குடியிருக்க வேண்டும். இங்கே வரவேற்புரையாற்றிய நம்முடைய அன்பரசன் அவர்கள் பேசுகின்றபோது குறிப்பிட்டு சொன்னார். முதன் முதலில் குடிசை மாற்று வாரியம் திட்டம் என்பது கலைஞரின் ஆட்சிக் காலத்தில்தான் உருவாக்கப்பட்டது என்பதை எடுத்து சொன்னார். அப்படிப்பட்ட குடிசை மாற்று வாரியம் இன்றைக்கு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் என்ற பெயரிலே வீடுகளை கட்டித்தருவது மட்டுமல்ல, பழுதடைந்த வீடுகளையெல்லாம் சீர்படுத்தி இன்றைக்கு அவர்களும் நிம்மதியாக வாழ வேண்டும் என்பதற்காக இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டு கொண்டிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் பேரறிஞர் அண்ணா காலத்தில் உருவாக்கப்பட்டு, ஆட்சிப் பொறுப்பேற்று, அதைத் தொடர்ந்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 5 முறை ஆட்சியில் இருந்தபோது அவர்கள் எல்லாம் செய்த சாதனைகள் உங்களுக்கு நன்றாக தெரிந்திருக்கும்.

**ஆட்சிப் பொறுப்பேற்றதுடன் நான் சொன்ன வாக்குறுதிகள்!**

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலின் முடிவுகள் அறிவிக்கப்பட்டபோது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் கூட்டணிக் கட்சிகள் பெரும்பான்மை இடங்களில் வெற்றிபெற்று ஆட்சிப் பொறுப்பேற்றோம்.

வெற்றி செய்தி கிடைத்தவுடன் உடனடியாக நானும், கழக மூத்த தலைவர்களும், முன்னோடிகளும், கழக செயல்வீரர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து நம்மை ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்களுடைய நினைவிடத்திற்குச் சென்று மரியாதை செலுத்தினோம்.

அதைத் தொடர்ந்து, தலைவர் கலைஞர் அவர்களின் நினைவிடத்திற்குச் சென்று மலர் வளையம் வைத்து மரியாதை செய்தோம். அதன் பிறகு நான் பத்திரிகையாளர்களைச் சந்தித்தேன்.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

# இந்தி புகட்டுவது கட்டாயமெனில், அதனை ஒழிப்பதும் கட்டாயம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் – புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கவிதையை மேற்கோள் காட்டி சமூக வலைதளப் பதிவு!

சென்னை, பிப். 20 -

“இந்தி புகட்டுவது கட்டாயமெனில் அதனை ஒழிப்பதும் கட்டாயம்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் பதிவிட்டுள்ளார்.

ஒன்றிய பா.ஜ.க. அரசு, இந்தியை புகுத்திட பல்வேறு வகைகளில் முயற்சித்து வருகிறது. அதில் ஒரு அங்கம் தான் மும்மொழி கல்வித்திட்டமாகும். இதற்கு இந்தியா முழுவதும் பலத்த எதிர்ப்பு கிளம்பி பல்வேறு ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் இருமொழிக் கொள்கைதான். மூன்றாவது மொழியான ‘இந்தித் திணிப்பை ஏற்க மாட்டோம்’ என ‘இந்தியா’ கூட்டணி சார்பில் ஒன்றிய அரசைக் கண்டித்து பெருந்திரள் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்திக்கு மும்மொழி கல்வித் திட்டத்திற்கு எதிராக பெண்கள் தங்களது வீடுகளுக்கு முன்பு “இந்தி ஒழிக” “தமிழ் வாழ்க” என்றும் ஒன்றிய அரசைக் கண்டித்தும் கோலங்கள் போட்டு எதிர்ப்புகளை காட்டியதோடு, பெண்கள் ஒன்றிய அரசுக்கு எதிராக கருத்துகளை பதிந்து வீடியோ வெளியிட்டு இருந்தனர்.

இதனிடையே முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது சமூக வலைதளப் பதிவில், அவ்வீடியோவை இணைத்து புரட்சிக் கவிஞர் பாரதி தாசன் கவிதையை மேற்கோள் காட்டி வெளியிட்டுள்ள பதிவு வருமாறு: -

**“இன்பத்திராவிடத்தில் இந்திமொழியே நீ**
**இட்டஅடி வெட்டப்படும் இந்திமொழியே**
**துன்பம் கொடுக்கவந்த இந்திமொழியே உன்**
**சூழ்ச்சி பலிப்பதில்லை எம்மிடத்திலே!**
**அன்பின் தமிழிளைஞர் தாய்அளித்திடும் நல்**
**அமுதத் தமிழ்மொழிக்கு வாய்திறக்கையில்**
**உன்னைப் புகட்டுவது கட்டாயமெனில் உனை**
**ஒழிப்பதும் எங்களுக்குக் கட்டாயமன்றோ?**

**- புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் பதிவிட்டுள்ளார்.

## கல்வி நிதியைத் தர மறுப்பதுபோல்

# பேரிடர் நிவாரண நிதியையும் தமிழ்நாட்டுக்கு ஒதுக்காமல் வஞ்சிக்கும் மோடி அரசு!

சென்னை, பிப். 20 –

நிதி ஒதுக்கீடு, சிறப்புத் திட்டங்கள் என அனைத்திலும் தமிழ்நாட்டை ஒன்றிய பா.ஜ.க. அரசு தொடர்ந்து வஞ்சித்து வருகிறது. கல்வி நிதியை விடுவிக்காமல் Blackmail செய்து வரும் ஒன்றிய அரசு, பேரிடர் நிவாரண நிதி ஒதுக்கீடு செய்வதிலும் வஞ்சித்து வருகிறது.

கடந்த ஆண்டு தமிழ்நாட்டில் ஃபெஞ்சல் புயலால் கடும் பாதிப்பு ஏற்பட்டது. சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டங்களும், திருநெல்வேலி உள்ளிட்ட தென் மாவட்டங்களும் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டன.

சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் சீரமைப்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக தற்காலிக நிவாரணத் தொகையாக 7 ஆயிரத்து 33 கோடி ரூபாயும், நிரந்தர நிவாரணத் தொகையாக 12 ஆயிரத்து 659 கோடி ரூபாயும் வழங்க வேண்டும் என்று பிரதமர் மோடிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதி வலியுறுத்தியிருந்தார்.

இதேபோல், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தென்காசி மாவட்டங்களில் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு அவசர நிவாரண நிதியாக 2 ஆயிரம் கோடி ரூபாய் தரவேண்டும் என்றும் முதலமைச்சர் வலியுறுத்தியிருந்தார்.

ஒட்டுமொத்தமாக தமிழ்நாட்டிற்கு புயல் மற்றும் மழை வெள்ள பாதிப்புக்கு 21 ஆயிரத்து 692 கோடி ரூபாய் ஒன்றிய அரசு வழங்கவேண்டும் என தமிழ்நாடு அரசு சார்பில் வலியுறுத்தப்பட்டது.

ஆனால், இதுவரை ஒன்றிய அரசு, தமிழ்நாட்டிற்கு மழை வெள்ள பாதிப்புகளுக்கு நிவாரண நிதி வழங்கவில்லை.

அதேநேரத்தில் பா.ஜ.க. மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு மட்டும் பேரிடர் நிவாரண நிதியை ஒன்றிய அரசு விடுவித்து வருகிறது. அந்த வகையில், ஏற்கனவே, ஆந்திரா உள்ளிட்ட 27 மாநிலங்களுக்கு 18 ஆயிரத்து 323 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருந்த ஒன்றிய அரசு, தற்போது ஆந்திரா, ஒடிசா உள்ளிட்ட 5 மாநிலங்களுக்கு ஆயிரத்து 554 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது.

அதன்படி, ஆந்திராவுக்கு 608 கோடி ரூபாயும், நாகாலாந்துக்கு 171 கோடி ரூபாயும், ஒடிசாவுக்கு 255 கோடி ரூபாயும், தெலங்கானா மாநிலத்திற்கு 232 கோடி ரூபாயும், திரிபுராவுக்கு 289 கோடி ரூபாயும் ஒன்றிய அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

அதேநேரத்தில், தமிழ்நாட்டிற்கு எந்த நிதியும் ஒதுக்காமல் ஒன்றிய பா.ஜ.க. அரசு மீண்டும் வஞ்சித்துள்ளது.